khfhzf; fy;tpj; jpizf;fsk;>tlkhfhzk; Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்குமாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர மூன்றாந் தவணை)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level 3rd Term) Exam, 2026

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I
Information & Communication Technology - I

G 12	20 T	I

மூன்று மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்

- ❖ எல்லா வினாக்களிற்கும் விடை தருக.
- ❖ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ❖ விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ❖ 1–40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைத்தாளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டுக.
- ❖ கணிப்பான்களை பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

1. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் செயற்பாட்டை மேற்கொள்வதற்காக கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது பொறிமுறைக் கணிப்பானைக் கண்டுபிடித்தவர் யார்?
   (1) ஜோன் நேப்பியர் (2) சார்ள்ஸ் பபேஜ் (3) பஸ்கல்
   (4) அடா (5) கொட்பிரட் வில்லியம் வொன் லிப்னிட்ஸ்

2. பின்வருவனவற்றில் பிழையான கூற்று எது?
   (1) தரவு முறைவழியாக்கப்பட்டு உருவாக்கப்படுவது தகவலாகும்.
   (2) தரவு உருவாக்கப்படும் நேரத்தில் அதன் உச்சப் பெறுமதியைக் கொண்டிருக்கும்.
   (3) தரவுச் செல்லுபடியாக்கல் மூலம் உள்ளீடு செய்யப்படும் தரவின் வழுக்கள் வெகுவாகக் குறைக்கப்படுகிறது.
   (4) தன்னியக்க முறையாக தரவு உள்ளீடு செய்யப்படுதலில் உணர்விகள் பெரிதும் பயன்படுத்தப்படுகிறன.
   (5) தகவல் உருவாக்கப்படும் நேரத்தில் அதி உச்சப்பெறுமதியைக் கொண்டிருக்கும்.

3. பாடசாலைகளில் உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை நிகழ்நிலையில் பூர்த்திசெய்யும் போது வழங்கப்படும் உள்ளீடுகளில் ஒன்றான மாணவர் ஒருவரது அடையாள அட்டை இலக்கமானது 12 இலக்கங்களை மாத்திரம் கொண்டிருக்க வேண்டும். இவ் உள்ளீட்டிற்கான தரவு செல்லுபடியாக்கல் முறைகள் எவை?
   A – வீச்சு சரிபார்ப்பு B – வகை சரிபார்ப்பு
   C – நீள சரிபார்ப்பு D – வடிவ சரிபார்ப்பு

   (1) A,B மாத்திரம் (2) A,C மாத்திரம் (3) B,C மாத்திரம்
   (4) B,C,D மாத்திரம் (5) A,B,C,D எல்லாம்

4. …….. என்பது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பங்களின் அணுகல், பயன்பாடு அல்லது தாக்கம் தொடர்பான பொருளாதார மற்றும் சமூக சமத்துவமின்மை ஆகும். இடைவெளியினை நிரப்புவதற்கு பொருத்தமான பதம் பின்வருவனவற்றுள் எது?
   (1) கருத்துத் திருட்டு (2) களவு (3)தனியுரிமை
   (4) இலக்கப்பிரிப்பு (5) வலைவீசல்

Past Papers Wiki

5. கணினியின் வரலாறு தொடர்பாக பின்வரும் கூற்றுகளுள் உண்மையானது எது?
   (1) கூட்டற் பொறியினை வடிவமைத்தவர் சார்ள்ஸ் பாபேஜ் ஆவார்.
   (2) ஆயிரக்கணக்கான வெற்றிடக்குழாய்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இலத்திரனியற் கணினி UNIVAC ஆகும்.
   (3) இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் சுட்டி மற்றும் சாவிப்பலகையின் பயன்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது.
   (4) மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் மிகப்பெரிய அளவிலான ஒருங்கிணைந்த சுற்றுக்கள் பயன்படுத்தப்பட்டன.
   (5) இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் இயந்திர மொழி பயன்பத்தப்பட்டது.

6. DRAM மற்றும் SRAM என்பவற்றக்கடையிலான பிரதான வேறுபாடு யாது?
   (1) SRAM இனை விட DRAM வேகமானது மற்றும் அதிக செலவுடையது
   (2) DRAM அடர்த்தி குறைவானது. SRAM அடர்த்தி கூடியது.
   (3) DRAM ஆனது ஒழுங்குமுறையில் புதுப்பிக்கப்படுதல் (refresh) வேண்டும். SRAM இல் அவ்வாறு இல்லை
   (4) SRAM ஆனது அவ்வப்போது புதுப்பிக்கப்படுதல் வேண்டும். ஆனால் DRAM அவ்வாறு இல்லை
   (5) SRAM முதன்மை நினைவகத்தில் பயன்படுத்தப்படுகின்றது. DRAM பதுக்கு நினைவகத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

7. பின்வரும் கூற்றுகளை கருதுக.
   A - BIOS ஆனது பிரயோக மென்பொருளாகும்
   B – பயன்பாட்டு மென்பொருள் நிலைபொருளிற்கு உதாரணமாகும்.
   C – ஒற்றர் பொருள் பிறழ்பொருளுக்கு உதாரணமாகும்.
   மேற்குறித்தவற்ற்ள எது/எவை உண்மையானது/உண்மையானவை?
   (1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம் (4) B,C மாத்திரம **(5)** A,B,C எல்லாம்

8. பின்வருவனவற்றுள் தருவிப்பு நிறைவேற்று சுழற்சியின் (Fetch Execute cycle) படிமுறை அல்லாதது எது?
   (1) அறிவுறுத்தலை எடுத்தல்
   (2) அறிவுறுத்தலை குறியீட்டாகம் செய்தல்
   (3) அறிவுறத்தலை செயற்படுத்தல்
   (4) தற்காலிக சேமிப்பு
   (5) வருவிளைவை வெளியீடு செய்தல்

9. பதின்ம 35.375_{10} இற்க சமவலுவுள்ள சரியான இரும எண் யாது?


   (1) 110001.110 (2) 101011.011 (3) 100011.011 (4) 100011.110 (5) 110001.011

10. பின்வருவனவற்றுள் சரியானவை எவை?
    A- 126_{10} :- 1111110_2
    B- 76_8 :- 111101_2
    C- $A5C_{16}$:- 101001011100_2
    (1) I,III ஆகியன மாத்திரம் (2) I,II ஆகியன மாத்திரம் (3) II,III ஆகியன மாத்திரம்
    (4) III மாத்திரம் (5) I, II,III ஆகியன மாத்திரம்

11. 111000101 XOR 11001100 இன் பெறுமானம்

    (1) 111001101 (2) 11110110 (3) 000110010 (4) 011000100 (5) 100001001

12. பின்வரும் தருக்கச் சுற்றை கருதுக. B = 1 ஆக இருக்கும் போது Q வின் வெளியீடு கட்டாயம் எதுவாக இருக்கும்?



(1) A (2) $\bar{A}$ (3) B (4) $\bar{B}$ (5) O

13. எளிமைப்படுத்தப்பட்ட பூலியன் கோவைகள் மிக எளிமையான சுற்றுகளைப் பெறுவதற்கு உதவும். பின்வருவனவற்றுள் எது $X + XY$ இன் ஓர் எளிதாக்கிய வடிவமாகும்?

(1) X (2) Y (3) XY (4) $\bar{X}Y$ (5) X + Y

14. தரப்பட்ட கணோ வரைபடத்திலிருந்து பெறப்படக்கூடிய மிகவும் எளிமையான பூலியன் கோவை யாதாகும்?

C \ AB	00	01	10	11
0	1	0	0	1
1	1	0	1	1

(1) $\bar{B}$ (2) $B + \bar{A}C$ (3) $\bar{B} + AC$ (4) $B + ABC$ (5) $BC + AB$

15. இலக்க முறைச் சுற்றுக்களில் SR - Latch இன் முதன்மை நோக்கம் என்ன?

(1) கணிப்பு கூட்டல் செய்ய

(2) தற்காலிக 1-பிட்டு நினைவகமாகச் செயற்பட

(3) சமிக்ஞைகளை வலுவூட்டியாகச் செய்ய

(4) (Amplify) AC மின்னோட்டத்தை DC மின்னோட்டமாக மாற்ற

(5) கடிகாரத் துடிப்புக்களை (Clock Pulses) எண்ணுவதற்கு.

16. NOR தருக்கப் படலைகளால் உருவாக்கப்பட்ட SR Latch இல் S மற்றும் R ஆகிய இரு உள்ளீடுகளும் 0 என இருந்தால்:

(1) வெளியீடு 1 ஆகக் காணப்படும்.

(2) வெளியீடு 0 ஆகக் காணப்படும்.

(3) வெளியீடு அதன் முந்தைய நிலையிலேயே (No change) காணப்படும்.

(4) வெளியீடு தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும்.

(5) வெளியீடு சாத்தியமற்ற (Invalid) நிலைக்குச் செல்லும்.

PAST PAPERS WIKI

17. கணினி ஒன்றில் அடிப்படை உள்ளீட்டு வருவிளைவு முறைமையினது (BIOS) செயற்பாடு பின்வருவனவற்றில் எது?

(1) அது பல்வேறு சாதனங்களுக்கான பௌதிக இடைமுகங்களை வழங்குகின்றது.

(2) ஏனைய சாதனங்களுடன் மைய முறைவழியாக்க அலகு தொடர்பாடுவதற்கான செய்நிரல்களை அது வழங்குகின்றது.

(3) அது வன்வட்டிலிருந்து பிரயோகங்களை மேலேற்றுவதற்கான நினைவக வெளியினை வழங்குகின்றது.

(4) அது கணினி இயங்குவதற்கான மின்வலுவினை வழங்குகின்றது.

(5) அது கணினிக்கு வேண்டிய நினைவக வெளியினை வழங்குகின்றது.

18. இயங்குநிலை எழுமாற்று பெறுவழி நினைவகம் (DRAM) பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – அது பதியியினது (register) தொழிநுட்பமாகப் பளன்படுத்தப்படுகின்றது.

B – அது நினைவக எழுமாற்று பெறுவழி நினைவகம் (SRAM) தொழிநுட்பத்தினை விட குறைந்த கதியினைக் கொண்டதாகும்.

C – அதன் அடர்த்தி நிலையான எழுமாற்று பெறுவழி நினைவக தொழிநுட்பத்தினை விட அதிகமாகும்.

இவற்றுள் சரியானவை எது/எவை?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்

(4) B,C மாத்திரம் (5) A,B,C அனைத்தும்

19. பணிசெயல் முறைமை ஒன்றில் இன்னொரு செயன்முறையை பிரதான நினைவகத்திற்கு கொண்டு வருவதற்காக பிரதான நினைவகத்திலிருக்கும் செயன்முறையொன்றை துணை நினைவகத்திற்கு மாற்றும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

(1) பக்கமாக்கல் (paging) (2) மாற்றப்படுதல் (swapping)

(3) துண்டாக்கல் (fragmentation) (4) நிலைமாற்றப்படுதல் (context switching)

(5) அட்டவணைப்படுத்தல் (scheduling)

20. IP முகவரி தொடர்பான பின்வரும் கூற்றுகள் சரியானவையா?

A. - IPV4, IPV6, ISDN என்பன IP முகவரிகளின் வகைகளாகும்.

B. - Mac முகவரியானது ஒரு சாதனத்தை அடையாளம் காண்பதற்கு பயன்படும்.

C. - 172.16.0.0 - 172.31.255.255 தனியார் IP முகவரி வீச்சாகும்.

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்

(4) A, B ஆகியன மாத்திரம் (5) A, C ஆகியன மாத்திரம்

21. பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானவை?

A. - TCP (Transmission Control Protocol), UDP (User Datagram Protocol) என்பன போக்குவரத்து கட்டத்தில் காணப்படும்.

B. - வலையமைப்பு அணி, HUB (மையம்) என்பன தரவு இணைப்புப்படில் (Data link layer) காணப்படும்.

C. - HTTP, SMTP ,DNS, DMCP என்பன பிரயோக அடுக்கைக் காணப்படும்.

(1) A (2) B (3) C (4) AB (5) AC

22. வலையமைப்பு ஒன்றில் உள்ள கணினி ஒன்று 192.200.15.35 எனும் IP முகவரியையும் 255.255.255.192 எனும் மறைக்குறியீட்டை (Subnet mask) கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இதன் வலையமைப்புக் கணினி ஒன்றுக்கு முதலாவது IP முகவரி பின்வருவனவற்றுள் எது?

(1) 192.200.15.5 (2) 192.200.15.75 (3) 192.200.15.1
(4) 192.200.15.63 (5) 192.200.15.10

23. உள்ளக வலையமைப்பு (LAN) 1012 வலையமைப்பு சாதனங்கள் (Network devices) உள்ளன. உள்ளக வலையமைப்பிற்கு பொருத்தமான துணைவலை மறைப்பான் யாது?

(1) 255.255.255.192 (2) 255.255.255.128 (3) 255.255.255.0
(4) 255.255.254.0 (5) 255.255.252.0

24. IPv4 தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்க.

A. – Class B ஆனது Class A இனை விட அதிகமான வலையமைப்புக்களை கொண்டிருக்கும்
B. – Class C ஆனது Class B இனை விட அதிகமான வலையமைப்புக்களை கொண்டிருக்கும்
C. – ஒரு IP முகவரியின் பயன்படுத்தும் பகுதி உபயோக பகுதிகளாகவும் நிர்வாகப்பகுதியாகவும் பிரிக்கப்படும்

மேற்கண்ட கூற்றுகள் தவறானது/தவறானவை எது/எவை?

(1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்
(4) A, C மாத்திரம (5) A, B, C எல்லாம்

25. 23.456 என்பதற்கான இரும (Binary) வடிவம்?

(1) 011101.0111 (2) 010110.0101 (3) 0011111.0111
(4) 010111.0111 (5) 010111.1110

26. வகுப்பு A வலையமைப்பொன்றின் IP முகவரி 125.134.112.66 ஆகவும், உபவலை மறைப்பான் 255.255.224.0 ஆகவும் இருந்தால், முதலாவது வலையமைப்பு முகவரி யாது இருக்கும்?

(1) 125.134.96.0 (2) 125.134.112.0 (3) 125.134.112.66
(4) 125.134.0.0 (5) 125.134.96.78

27. எந்த செம்மை நடப்புஒழுங்கு மின்னஞ்சல் (Protocol Email) அனுப்ப பயன்படுத்தப்படுகிறது?

(1) HTTP (2) FTP (3) SMTP (4) SNMP (5) TELNET

28. Bandwidth என்பதன் அர்த்தம் என்ன?

(1) தரவு அளவு (2) தரவு பரிமாற்ற வேகம் (3) சேமிப்பு திறன்
(4) நினைவகம் (5) செயலி வேகம்

29. TCP மற்றும் UDP இடையிலான முக்கிய வேறுபாடு யாது?

(1) TCP வேகமானது (2) UDP இணைப்பு அடிப்படையிலானது
(3) TCP நம்பகத்தன்மை (4) UDP பிழை திருத்தம் செய்கிறது
(5) இரண்டும் ஒரே மாதிரி

Past Papers Wiki

30. ஒரு விற்பனை நிறுவனமானது சிறப்பு தள்ளுபடி அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளது. பொருட்களுக்கான கழிவுகளை கொள்வனவு செய்வோர் இலகுவாக கணிப்பிடுவதற்கு ஒரு குறிமுறையின் பகுதியளவு செய்நிரலை செய்நிரலாளர் உருவாக்குகின்றார். அதனை சோதித்துப் பார்ப்பதற்கு பொருட்களின் barcode இனை வாசித்து அதன் கழிவு காட்சிப்படுத்தப்படுகின்றது. இதற்கு பொருத்தமான சோதிப்பு முறை யாது?

(1) அலகுச்சோதனை (2) ஒருங்கிணைப்புச்சோதனை (3) ஏற்புடைச்சோதனை
(4) கறுப்புப்பெட்டிச் சோதனை (5) வெண்பெட்டிச்சோதனை

31. ஒரு நிறுனமானது தனது தீர்மான முகாமைத்துவ முறைமையை ஒரு புதிய முறைமையினால் மாற்றீடு செய்ய தீர்மானித்துள்ளது. புதிய முறைமையானது ஆரம்பத்தில் முறைமையின் ஒரு பகுதியளவு நிறுவப்பட்டு அதன் பின்னர் படிப்படியாக விரிவாக்கப்படுகின்றது. வைகாசி மாதம் 4ஆம் திகதி பழைய முறைமை முழுமையாக நிறுத்தப்பட்டு அதே திகதியில் புதிய முறைமை நிறுவப்பட்டது. இந்த முறைமை மாற்றத்தில் என்ன வகையான நிறுவுதவ் முறை பயன்படுத்தப்பட்டது?

(1) முன்னோடியும் நேரடியும் (2) முன்னோடியும் சமாந்தரமும் (3) கட்டமும் நேரடியும்
(4) கட்டமும் சமாந்தரமும் (5) நேரடிமுறை.

32. பின்வரும் முறைமை விருத்தி மாதிரியங்களை அதன் விவரணங்களுடன் பொருத்துக.

1. சுருளி மாதிரியம்.	A. மீள்சுழற்சியும் நிலையானது அல்லது மாறும் தேவைக்கு பொருத்தமானது.
2. சுறுசுறுப்பு மாதிரியம்	B. மீள்சுழற்சியும் பயனர் பின்னூட்டல்களைப் பெற்று தேவைகளை மாற்றியமைக்க முடியும்.
3. மூலவகை மாதிரியம்	C. சிக்கலான தேவைகளுக்கு மிகப் பொருத்தமானது.

(1) 1. A 2. B 3. C (2) 1. C 2. B 3. A (3) 1. C 2. A 3. B (4) 1. B 2. C 3. A (5) 1. A 2. C 3. B

33. பின்வருவனவற்றுள் தரவுப் பாய்ச்சற் வரைபடம் தொடர்பாக பிழையான கூற்று எது?

(1) ஒரு முறைவழியாக்கத்திலிருந்து தரவுக்களஞ்சியத்திற்கு தரவு கடத்தப்படும்.
(2) ஒரு முறைவழியிலிருந்து இன்னொரு முறைவழிக்கு தரவு கடத்தப்படும்.
(3) ஒரு வெளிப்புற நிலைபொருளிலிருந்து இன்னொரு வெளிப்புற நிலைபொருளிற்கு தரவு கடத்தப்படுவதை இடைவிட்ட கோட்டினால் குறித்துக் காட்டப்படும்
(4) ஒரு தரவுக்களஞ்சியத்திலிருந்து இன்னொரு தரவுக்களஞ்சியத்திற்கு தரவு கடத்தப்படும்.
(5) ஒரு தரவுக்களஞ்சியத்திலிருந்து ஒரு முறைவழிக்கு தரவு கடத்தப்படும்.

34. பின்வருவனவற்றில் ஆலோசனை வழங்க அல்லது முடிவுகளை எடுப்பதற்கு நிபுணத்துவ அறிவின் தரவுத்தளங்களை பயன்படுத்தும் முறைமை எது?

(1) உள்ளடக்க முகாமைத்துவ முறைமை (2) வல்லுனர் முறைமை
(3) அறிவு முகாமைத்துவம் (4) நிறைவேற்று உதவு முறைமை
(5) தீர்மான முறைமை

35. தகவல் முறைமை தொடர்பாக நிரல் A, B ஆனது சில விவரணங்களை பட்டியலிடுகின்றது.

நிரல் A		நிரல் B	
A1	பரிமாற்ற முறைவழியாக்கல் முறைமை	B1	ஒரு நிறுவனத்தின் நிர்வாக தரப் பயனாளர்களுக்கு சேவை வழங்கல்
A2	முகாமைத்துவ தகவல் முறைமை	B2	ஒரு நிறுவன்தின் செயற்பாட்டு மட்ட பயனர்களுக்கு சேவை வழங்கல்
A3	நிறைவேற்று உதவு முறைமை	B3	ஒரு நிறுவனததின் மூலோபாய மட்டபயனருக்கு சேவை வழங்கல்.

பின்வருவனவற்றில் எது மேலுள்ளவற்றில் சரியான தொடர்பைக் கொண்டுள்ளது?

(1) A1 -B2
A2 -B1
A3 -B3

(2) A1 -B3
A2 -B1
A3 -B2

(3) A1 -B1
A2 -B2
A3 -B3

(4) A1 -B1
A2 -B3
A3 -B2

(5) A1 -B2
A2 -B3
A3 -B1

36. பின்வரும் இயல்புகளைக் கொண்டுள்ள முறைமை வடிவமைப்பு கட்டத்தில் உருவாக்கப்படும் வரிப்படம் எது?

- முறைமையின் பிரதான கூறுகளுக்கு இடையே உள்ள தரவுப் பாய்ச்சலை விபரிக்கின்றது.
- முறைமையின் செயல்பற்றிய உச்சமட்ட காட்சிகளை வகைக்குறிக்கும்.
- சூழல் வரிப்படத்தினை மேலும் விபரிக்கின்றது.

(1) ஆவணப் பாச்சற் வரிப்படம
(2) தர்க்க தரவு மாதிரி வரைபடம
(3) தாழ்மட்ட தரவுப் பாச்சற் வரைபடம
(4) 1ஆம் மட்ட தரவுப் பாச்சற் வரைபடம
(5) உயர்மட்ட தரவுப் பாச்சற் வரைபடம

37. பின்வருவனவற்றில் எவை சந்தையில் கொள்வனவு செய்யக்கூடிய மென்பொருள் பொதிகளுடன் ஒப்பிடும் போது பொதி செய்த மென்பொருள் முறைமையையின் பண்புகளாகும்?

A - விருத்திச் செயன்முறை நீண்டகாலமாக மேற்கொள்ளப்படும்.
B - ஒருபோதும் பயன்படுத்தாத விடயங்கள் பலவிடயங்களை உள்ளடக்கியிருக்கும்.
C - செலவு அதிகம்
D - மாற்றத்திற்கு உள்ளாக்கல் கடினமானது.

(1) A,B மட்டும் (2) B,C மட்டும் (3) C,D மட்டும் (4) A,C மட்டும் (5) B,D மட்டும்

38. ஒரு பாடசாலை மாணவர் வருகையை கணினி மூலம் பதிவு செய்யும் ஒரு புதிய உருவாக்க தீர்மானித்துள்ளது. முதலில் அவர்கள் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளிடமிருந்து தேவைகளை சேகரிக்கின்றார்கள். இந்த நிலையில் முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்டத்தின் எந்தக் கட்டத்தில் நடைபெறுகின்றது.?

(1) முறைமைப் பரிசோதனை
(2) முறைமையை நடைமுறைப்படுதல்
(3) முறைமைப் பராமரிப்பு
(4) தீர்வினை குறிமுறைப்படுத்தல்
(5) தேவைகளைப் பகுப்பாய்வு செய்தல்

39. பின்வரும் முறைமை வகைகளைக் கருதுக.

A - ஒரு சூழலியல் அமைப்பு தன்னுள் உள்ள உயிரினங்களும் வெளியுலக சூழலும் பரஸ்பர தொடர்பு கொண்டு இயங்குகின்றன.

B - ஒரு மென்பொருள் முறைமை வெளியுலக மாற்றங்களை ஏற்காமல் இற்றைப்படுத்தல் இல்லாமல் இயங்குகின்றது.

C - ஒரு முழுமையாக மூடிய கண்ணாடிப் போத்தலில் எந்தக் காற்றும் உள்ளே, வெளியே செல்லாது.

மேற்குறித்தவற்றில் மூடிய முறைமையாக கருததப்படக்கூடியது எது/எவை?

(1) A மாத்திரம் (2) A.C மாத்திரம் (3) A,B மாத்திரம்

(4) B,C மாத்திரம் (5) A,B,C மாத்திரம்

40. பின்வரும் சில முறைமையின் தொழில்களைக் கருதுக.

A - ஒரு நிகழ்நிலை அங்காடி முறைமையில் பயனர்களை உள்நுழையும் வசதி(Login)

B - ஒரு பாடசாலையானது மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழகம் செல்வதற்கு கற்றல் கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ளல்.

C - ஒரு வைத்தியசாலை முறைமையானது நோயாளிகளின் நோய்கள் தொடர்பான விடயங்களை அறிக்கையாக உருவாக்குகின்றது.

மேற்கூறப்பட்டவற்றில் எது/எவை முறைமை ஒன்றின் செயல்சாராத தேவைகளாக கருதலாம்?

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) A,C மாத்திரம்

(4) A,B மாத்திரம் (5) A,B,C எல்லாம்

***

khfhzf; fy;tpj; jpizf;fsk;>tlkhfhzk; Provincial Department of Education, Northern Province

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்குமாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர மூன்றாந் தவணை)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level 3rd Term) Exam, 2026

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் II
Information & Communication Technology - II

G 12	20 T	II

மூன்று மணித்தியாலம்

இவ் வினாத்தாள் A,B என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. இரு பகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்ட நேரம் இரண்டு மணித்தியாலங்கள் ஆகும். (மேலதிக வாசிப்பு நேரமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.)

❖ கணிப்பானை பயன்படுத்தக்கூடாது.

❑ **பகுதி A - அமைப்புக்கட்டுரை**

வினாக்களுக்குரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.

❖ ஒவ்வொரு வினாவுக்கும் விடப்பட்டுள்ள இடத்தில் உமது விடைகளை எழுதுக.

❖ கொடுக்கப்பட்டுள்ள இடம் உமது விடைகளுக்குப் போதுமானது என்பதையும் விரிவான விடைகள் அவசியமில்லை என்பதையும் கவனிக்க.

❑ **பகுதி B - கட்டுரை**

❖ இப்பகுதி மூன்று வினாக்களைக் கொண்டுள்ளது. அவற்றில் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. உமக்கு வழங்கப்படும் தாள்களை இதற்கு பயன்படுத்துக.

❖ இவ் வினாத்தாளுக்கென வழங்கப்பட்ட நேர முடிவில் பகுதி A மேலே இருக்கும் படியாக A,B ஆகிய இரண்டு பகுதிகளையும் ஒன்றாகச் சேர்த்துக்கட்டிய பின்னர் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்க.

சுட்டெண் : .....

பரீட்சகரின் உபயோகத்திற்கு மாத்திரம்

20 – தகவல் தொடர்பாடல்தொழினுட்பவியல் II

பகுதி	வினா இல.	புள்ளிகள்
A	1	
	2	
	3	
	4	
B	5	
	6	
	7	
	8	
	9	
	10	
	மொத்தம்	

சதவீதம்

இலக்கத்தில்

பகுதி A - அமைப்புக் கட்டுரை நான்கு வினாக்களுக்கும் **இத்தாளிலேயே** விடை எழுதுக	இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

1.

a. $(47_{10} - 35_{10})$ இன் பெறுமதியினை கணிப்பதற்கு 8- பிற்றுகள் கொண்ட ஒன்றின் நிரப்பி வடிவினை பயன்படுத்துக. உமது கணிப்புகளை காட்டுக

.....

.....

.....

.....

.....

b. $(47_{10} - 35_{10})$ இன் பெறுமதியினை கணிப்பதற்கு 8- பிற்றுகள் கொண்ட இரண்டின் நிரப்பி வடிவினை பயன்படுத்துக உமது கணிப்புகளை காட்டுக

.....

.....

.....

.....

.....

c. மேலே b இல் பெறப்பட்ட இரண்டின் நிரப்பியில் அமைந்த பெறுமானத்தை சாதாரண தசம எண் வடிவில் மாற்றுவதற்கான படிமுறைகளை எழுதுக.

.....

.....

.....

.....

.....

d. ஒரு கணினியின் உட் செய்பணிகளுக்காக தரவுகளை இரண்டின் நிரப்பி வகையாக குறிப்பதன் மூலம் கிடைக்கும் அனுகூலம் இரண்டை குறிப்பிடுக.

.....

.....

e. 11001101_2 ,00101110_2 என்னும் இரு இரும எண்களுக்கிடையே உள்ள பிற்று வாரி (bitwise) AND செயலினதும், OR செயலினதும் சரியான விளைவுகளைத் தருக?

.....

.....

.....

2.

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

a. பின்வரும் கொள்பணிகள் ஒவ்வொன்றுக்கும் பொறுப்பான OSI வலையமைப்பு மேற்கோள் மாதிரியத்தின் அடுக்குகளைக் குறிப்பிடுக.

1	MAC Address மூலம் சரியான கணினிக்குத் தரவை அனுப்புதல்	
2	தரவுகளைப் பொதிகளாக (Packets) மாற்றுதல்	
3	தரவுகளை பிட்களாக (Bits - 0s and 1s) அனுப்புதலும் பெறுதலும்	
4	HTTP/HTTPS மற்றும் கோப்புப் பரிமாற்றம் (FTP) போன்ற சேவைகளை வழங்குகிறது.	
5	தரவு மறைக்குறியீடு (Encryption) மற்றும் சுருக்கம் (Compression) ஆகியவற்றைச் செய்கிறது.	
6	TCP மற்றும் UDP நெறிமுறைகள் இங்கு செயல்படுகின்றன.	

b. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றிலும் இருக்கும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான பதத்தை தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.
பட்டியல் :(ரோஜன் குதிரை, சமச்சீர் மறைகுறியாக்கம், CIDR, DNS, வலைவீசல் (Phishing), UDP, பல்வழியாக்கி, சமச்சீரற்ற மறைகுறியாக்கம், NAT, TCP)

(i) ஒரு உள்ளூர் வலையமைப்பில் உள்ள தனியார் IP முகவரிகளைப் பொது IP முகவரிகளாக மாற்றுவது..... எனப்படும்.

(ii) IP முகவரிகளை வினைத்திறனாகப் பயன்படுத்தவும், துணை வலையமைப்புகளை (Subnets) உருவாக்கவும் பயன்படும் முறை ..... ஆகும்.

(iii) பொதுச் சாவி (Public key) மற்றும் தனிப்பட்ட சாவி (Private key) ஆகிய இரண்டைப் பயன்படுத்தித் தரவுகளைப் பாதுகாக்கும் முறை..... ஆகும்.

(iv) பயனாளிகளுக்குத் தெரியாமல் அவர்களின் கணினித் தரவுகளைத் திருடும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு தீய மென்பொருள் (Malware) ..... ஆகும்.

(v) நம்பகத்தன்மை குறைந்த தொடர்புகளைக் கொண்ட, வேகமான தரவுப் பரிமாற்றத்திற்குப் பயன்படும் இணைப்பு அற்ற (Connectionless) நெறிமுறை ..... ஆகும்.

Past Papers Wiki

(vi) ..... என்பது ஓர் சமிக்ஞை தொடர்பு ஊடகத்தை ஒரே நேரத்தில் கடந்து செல்வதற்காக பல தகவல் சமிக்ஞைகளை ஒன்றாக இணைக்கக்கூடிய தொழில்நுட்பம் ஆகும்.

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

c. ரவி அந்தரங்கச் செய்தி "HELLO" ஐ விமலிற்கு அனுப்பவேண்டியுள்ளது எனக் கொள்க. ரவி "HELLO" ஐ அனுப்புவதற்கு முன்பாக "JGNNQ" ஆக மாற்றுகின்றார்.

(i) இதற்காகப் பயன்படுத்தப்பட்ட மறைக்குறியாக்கச் சாவி (Encryption Key) என்ன?

.....

.....

(ii) அதே பாதுகாப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி செய்யும் வேறு தொடர்பாடலில் ரவியிடமிருந்து "EQORWVGT" ஐ விமல் பெற்றால் ரவியின் தொடக்கச் செய்தி யாது?

.....

.....

d. கணினி A, 1101010 எனும் தரவை இரட்டைச் சமநிலை பிட் உடன் சேர்த்து 11010100 என அனுப்புகிறது. தரவு வாய்க்காலில் ஏற்பட்ட மாற்றத்தால் கணினி B 11010101 என தரவினைப் பெறுகின்றது. கணினி B வழுவினைக் கண்டுபிடிக்குமா அல்லது இல்லையா என்பதைச் சுருக்கமாக விளக்கத்துடன் கூறுக.

.....

.....

.....

.....

.....

.....


.....

.....

3.

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

a. பின்வரும் கொணர் நிறைவேற்று சக்கரத்தின் படிமுறைகளை பெட்டிகளினுள் எழுதுக.



b. செயன்முறை அட்டவணைப்படுத்தலுக்காக(process scheduling) பணிசெயல்முறை ஒன்று ஏழு நிலைகளை கொண்ட செயன்முறை பரிமாற்ற மாதிரியை (seven state process transition model) பயன்படுத்துகிறது தரப்பட்ட செயன்முறை தற்போது நிலையிலிருந்து அடுத்த சாத்தியமான நிலையையும் மாற்றத்திற்கான நிபந்தனைகளையும் கீழே தரப்பட்ட அட்டவணையில் நிரப்புக

தற்போதைய நிலை	**அடுத்து சாத்தியமாகும் நிலை**	**மாற்றத்திற்கான நிபந்தனை**
காத்திருத்தல்	1	
	2	
ஓடு நிலை	1	
	2	
தடுக்கப்பட்ட நிலை	1	
	2	

c. பின்வரும் விவரணங்கள் பணிசெய்முறைமை தொடர்பானவை. கீழே தரப்பட்ட பட்டியலிலிருந்து பொருத்தமான சொற்களை எழுதுக.

பட்டியல்கள்:

[பல்செய்நிரலாக்கம், சந்தர்ப்ப ஆளி (context switch), இடமாற்றல் (swapping), காலஅட்டவணைப்படுத்தல் (Scheduling), இயங்குநிலை மேலேற்றல் (Dynamic loading), முறைவழி, நினைவகம், பணிசெய்முறைமை, முறைவழிக் கட்டுப்பாட்டு தொகுதி Process control block (PCB)]

விவரணம்	பொருத்தமான சொற்கள்
i. நிறைவேற்றலில் உள்ள ஓர் செய்நிரல்.	
ii. முறைவழியொன்று தற்காலிகமாக நினைவகத்திலிருந்து துணைக்களஞ்சியத்திற்கு இடமாற்றப்பட்டு, பின்னர் தொடர்ச்சியான நிறைவேற்றுகைக்காக மீளவும் நினைவகத்திற்குக் கொண்டுவரப்படுல்.	
iii. CPU ஆனது எப்பொழுதும் ஒரு நிறைவேற்றுகையினை மேற்கொள்ளும் பொருட்டு, வேலைகளை ஒழுங்கமைப்பதனால் CPU ன் பயன்பாடு அதிகரிக்கப்படல்.	
iv. நினைவக வெளிப்பயன்பாட்டினை நன்றாகப் பெறுவதற்கு, செய்நிரலானது அது அழைக்கப்படும் வரையில் மேலேற்றப்படுவதில்லை	

d. 18 bits மெய்நிகர் நினைவக முகவரி இடத்தினைக் கொண்ட (Virtual Memory Address Space) கணினியில் 8 bits ஆனது பக்க முகவரிக்காகப் (Page Address) பயன் படுத்தப்பட்டுள்ளது.

(i) மேற்படி முகவரி திட்டமிடலின் அடிப்படையில் உருவாக்க முடியுமான பக்கங்களின் எண்ணிக்கையினைக் கணிக்க.

……

……

……

(ii) 010111010100111101 என்னும் மெய்நிகர் நினைவக முகவரியினைக் கருதுக. இவ் விலாசத்திலுள்ள பக்கம் (page) மற்றும் பெயர்ச்சி (displacement) பெறுமானங்களைக் காண்க.

……

……

……

4. பின்வரும் வினாக்கள் அரச வைத்தியசாலையில் பயன்படுத்தப்படும் வைத்தியசாலை தகவல் முறைமையை அடிப்படையாகக் கொண்டவை. a. **தகவல் முறைமை** (information system) என்பதனை வரையறுக்குக. .... b. (a) இல் வழங்கப்பட்ட வரைவிலக்கணத்தை பயன்படுத்தி, வைத்தியசாலை நோயாளி முகாமைத்துவ முறைமையானது ஒரு தகவல் முறைமை என்பதனை விளக்குக. உமது விடையில் அதன் கூறுகளையும் குறிப்பிடுக. .... c. வைத்தியசாலையானது தற்பொழுது கைமுறையிலான காகிதத்தை அடிப்படையாகக் கொண்ட முறைமையை பயன்படுத்துகின்றது. கணனி மயப்படுத்தப்பட்ட முறைமைக்கு மாறுவதற்கு கைமுறையிலான முறைமையின் மூன்று குறைபாடுகளை குறிப்பிடுக. .... d. வைத்தியசாலை தகவல் முறைமையின் பின்வரும் தேவைகள் ஒவ்வொன்றையும் செயல்சார் தேவை, செயல்சாரா தேவை என வகைப்படுத்துக. i) ஒரு வைத்தியர் நோயாளியின் மருத்துவ தகவல்களை பார்வையிடக்கூடியதாக இருத்தல். ..... ii) முறைமையானது எந்தவொரு தேடல் வினவலுக்கும் இரண்டு வினாடிகளில் பதிலளிக்க கூடியதாக இருக்க வேண்டும். ..... iii) நோயாளியின் தரவுகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை ஊழியர்கள் மாத்திரம் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும்.	இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது

e. மருத்துவமனை நிர்வாகம் கருத்தில் கொள்ளவேண்டிய ஒரு தொழில்நுட்பம் தவிர்ந்த சாத்தியக்கூற்றை கூறவும். அது ஏன் பொருத்தமானது என விளக்குக.

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

.....


.....

***

பகுதி - II B

யாதாயினும் இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

5. a) (i) கீழே காட்டப்பட்டுள்ள தர்க்கச் சுற்றில் வெளியீடு F இற்கான பூலக் கோவையினை எழுதுக.



(ii) மேலே (i) நீர் பெற்ற வெளியீடு F இற்கான சார்பினை பூலியன் அட்சரகணித முறையில் சுருக்குக. சுருக்குதலில் நீர் பயன்படுத்திய பூல விதிகளினை தெளிவாகக் குறிப்பிடுக.

b) P, Q, R, S எனும் நான்கு உணர்விகளினால் (Sensors) ஒரு பொறி கட்டுப்படுத்தப்படுகின்றது. உணர்விகள் P யும் Q உம் செயலூக்க நிலையில் (இலக்க நிலை 1) இருப்பதுடன் மற்றைய இரு உணர்விகளில் ஏதாவது ஒன்று செயலூக்க நிலையில் இருப்பின் எச்சரிக்கை முறைமை செயலூக்க நிலைக்கு (இலக்க நிலை 1) கொண்டுவரப்பட்டுத் தொழிற்படுத்தப்படுகின்றது.

(i) மேலுள்ள பொறியின் எச்சரிக்கை முறைமையின் தொழிற்பாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தும் உண்மை அட்டவணையை வரைக.

(ii) அதிலிருந்து எச்சரிக்கை முறைமையின் தொழிற்பாட்டிற்கான பூலியன் கோவையினை SOP வடிவில் எழுதுக.

(iii) நீர் பெற்ற கோவையினை கானோ வரைபடத்தில் (Karnaugh Map) குறித்துச் சுருக்குக.

(iv) மேலே பகுதி (iii) இல் சுருக்கி நீர் பெற்ற சமன்பாட்டிற்குரிய தர்க்கச் சுற்றினை அமைக்க.

6.

a) பின்வரும் பந்தியில் உள்ள A,B,C என முகப்படையாளமிடப்பட்ட வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பிரதியிடுதல்களை எழுதுக:

OSI மாதிரியில் தரவு பொதிகளின் போக்குவரத்து செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடப்பொழுங்குகளாக ….A... யும் ...B... யும் காணப்படுகின்றது. அதில் A ஆனது தரவு வழங்கலை உத்தரவாதப்படுத்த ... C ... முறையினப் பயன்படுத்துகின்றது..

b) இணையத்தினைப் பயன்படுத்தும்போது பல்வேறு வகைப்பட்ட அச்சுறுத்தல்களை எதிர்நோக்க நேரிடும். அவ்வகையான மூன்று அச்சுறுத்தல்களை பட்டியலிடுக.

c) நான்கு கணினிகள், ஒரு சேவையகக் கணினி(server), ஒரு வலையமைப்பு அச்சுப் பொறி, ஆளி(switch) என்பன ஒரு விண்மீன் இடத்துரியில் இணைக்கப்பட்டுள்ளதான ஒரு வலையமைப்பின் விரிவான வரைபடமொன்றை வரைக. உங்களது வரைபடத்தில் பயன்படுத்திய கூறுகள் அனைத்தையும் பெயரிடுக.

d) பின்வரும் ஒவ்வொன்றுக்கும் ஓர் உதாரணம் வீதம் எழுதுக:

(i) B வகுப்பு தனிமுறை (Private) IP முகவரி

(ii) ஒரு CIDR குறியீட்டு முறையிலான IP முகவரி

e) A முதல் D வரை முகப்படையாளமிடப்பட்ட ஒவ்வொரு OSI அடுக்கையும் 1 முதல் 4 வரை முகப்படையாளமிடப்பட்ட சரியான விவரிப்புகளுடன் பொருத்துக.

(குறிப்பு: உங்களது விடைக்கு தரப்பட்ட முகப்படையாளங்களை மாத்திரம் பயன்படுத்துக.)

OSI அடுக்கு
A - பிரயோக அடுக்கு
B - போக்குவரத்து அடுக்கு
C - வலையமைப்பு அடுக்கு
D – தரவு இணைப்பு அடுக்கு

விவரிப்பு
1 - தரவுப் பொதிகளுக்கான வழிப்படுத்துதல், பாதையைத் துணிதல் ஆகியவற்றைச் செய்கிறது.
2 - தரவுகளை துண்டங்களாகப் பிரிப்பதுடன் நம்பகமான தரவு வழங்கலை உறுதிசெய்கின்றது.
3 - பயனர் மென்பொருளுக்கு வலையமைப்புச் சேவைகளை வழங்குகின்றது
4 - தரவுகளின் பௌதிக ஊடுகடத்தலை முகாமை செய்கிறது.

f) கமல் அந்தரங்கச் செய்தி ADD ஐ நிமலிற்கு அனுப்பவேண்டியுள்ளது எனக் கொள்க. கமல் ADD ஐ நிமலிற்கு அனுப்புவதற்கு முன்பாக CFF ஆக மாற்றுகின்றார். இத்தொடர்பாடலில் கமல் பயன்படுத்திய மறைக்குறியாக்கச் சாவியை (encryption key) எழுதுக

Past Papers Wiki

g) 192.168.60.0/25 எனும் IP முகவரித் தொகுதியானது 30, 14, 62, 6, 2 ஆகிய பயன்படுத்தத்தக்க விருந்தோம்பிக் கணினிகள் முறையே தேவைப்படுகின்ற S1, S2, S3, S4, S5 எனப் பெயர் குறிப்பிடப்படும் ஐந்து துறைகளுக்கு குறித்தொதுக்குவதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனக் கொள்க. ஒவ்வொரு துறையின் துணை வலையமைப்பிற்கும் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளைத் தரப்பட்டுள்ள பின்வரும் மாதிரிக்கமையை ஓர் அட்டவணையொன்றில் தருக:

துறையின் பெயர்	வலையமைப்பு முகவரி (Network Address)	உபவலை மறைமுகம் (subnet mask)	பாவிக்கப்படக் கூடிய முதலாவது IP முகவரி	பாவிக்கப்படக் கூடிய இறுதி IP முகவரி	தொலைப் பரப்பல் IP முகவரி (Broadcast IP)

7. a) பணிசெயல் முறைமை ஒன்றில் சந்தர்ப்ப ஆளி முறையின் (Context Switching) போதான படிமுறைகளை எழுதுக.

b) உம்மிடம் 0 முதல் 128k வரை 17 பிட்கள் மெய்நிகர் முகவரிகளைப் பயன்படுத்தக்கூடிய கணினி உள்ளது என்று வைத்துக்கொள்வோம். இந்த கணினியில் 32KB பௌதீக நினைவகம் மட்டுமே உள்ளது என்றும் இந்த கணினியின் பக்க அளவு 4KB என்றும் வைத்துக்கொள்வோம். மேலே உள்ள 17 பிட் மெய்நிகர் முகவரியானது பக்க எண்ணின் பிட் மற்றும் பெயர்ச்சி பிட் ஆகியவற்றால் ஆனது எனின்

(i) இந்த கணினியின் பௌதீக நினைவத்தில் எத்தனை சட்டகங்கள் உருவாக்கப்படுகின்றன?

(ii) மெய்நிகர் முகவரியில் பெயர்ச்சிக்காக (offset) ஒதுக்கப்பட்ட பிட்களின் எண்ணிக்கையையும் பக்க எண்ணுக்கு ஒதுக்கப்பட்ட பிட்களின் எண்ணிக்கையையும் எழுதுக.

(iii) மெய்நிகர் நினைவகம் மற்றும் பௌதீக நினைவகத்தினை பயன்படுத்தும் போது பக்க அட்டவணையின் தேவை என்ன?

c) NTFS மற்றும் FAT32 கோப்பு முறையிலுள்ள வேறுபாடுகள் இரண்டு தருக.

d) சந்தர்ப்ப ஆளிமுறைமை செயற்பாட்டில் செயல் கட்டுப்பாட்டுத் தொகுதியின் (Process Control Block- PCB) தொழிற்பாட்டை விளக்குக?

***

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library